# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு - 2015/2016 (Jan - 2020)

## ED/S – 2213 நிறுவன நடத்தையும்; பயன்தரு பாடசாலை முகாமைத்துவமும் (Organizational Behavior and Effective School Management)

நேரம் - 03 மணித்தியாலங்கள்.

பகுதி I இல் இருந்து ஏதாவது இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

## பகுதி I

01. அ. "பாடசாலை ஒரு நிறுவனமாகும்" (School as an Organization) இதற்கிணங்க பாடசாலையொன்றின் நிறுவனக்கட்டமைப்பு என்பதால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாதென்பதனைக் குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

ஆ. திறனற்ற தரக்கட்டுப்பாடானது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் எவ்வகையில் தாக்கம் புரிகின்றது என்பது பற்றிய உமது கருத்து. (05 புள்ளிகள்)

இ. நிறுவனத்தில் காணப்படும் **மதிப்பீடுகள், இறைமை, வரலாறு,** மற்றும் **விதிகள்** என்பன நிறுவன கலாசாரத்தினுள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதனை சுருக்கமாக ஆராய்க. (07 புள்ளிகள்)

02. அ. நிறுவன நடத்தையானது இன்றைய நிலையில் விஞ்ஞான ரீதியாக மாற்றமடைந்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினை (02) முன்வைக்குக. (02 புள்ளிகள்)

ஆ. "திட்டத்தை யதார்த்த நிலையில் செயலாற்றுதல் அல்லது அமுல்படுத்துதல்" எனும் நிறுவனத் தொழிற்பாட்டுக் கட்டத்தில் ஊழியர்களுக்கிடையேயான தொடர்பாடல் செயன்முறையின் தாக்கம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

இ. இன்றைய காலகட்டத்தில் நிறுவன நடத்தைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை வலுவிளக்கச்செய்வதற்காக முகாமையாளர் எனும் ரீதியில் நீர் கூறும் ஆலோசனைகள் ஐந்து (05) தொடர்பாக கருத்துரைக்க (07 புள்ளிகள்)

03. அ. பாடசாலையின் நிர்வாகச்செயற்பாட்டின் **உள்ளீடு, செயன்முறை, வெளியீடு** என்பனவற்றினால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது? (02 புள்ளிகள்)

ஆ. "மாற்றம் ஒன்று இயல்பான சூழ்நிலையில் அதிக பேராசைத் தன்மையுடன் அமுல்படுத்தப்படுமாயின் தோல்வியில் முடிவடைவதற்கான சாத்தியங்களே அதிகமாக இருக்கும்". கல்வியில் இதன் சாத்தியத்தன்மையை இரண்டு (02) உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக.

(05 புள்ளிகள்)

இ. வெளித்தாக்கங்களைச் செயல் இழக்கச் செய்வதற்கு நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் மீள்தாக்கங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டு அவற்றினை விளக்க நடைமுறை உதாரணம் ஒன்று மூலம் சுருக்கமாக பரிசீலனை செய்க.

(07 புள்ளிகள்)

## பகுதி II

04. அ. கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதியிலுள்ள பலம், பலவீனம் என்பனவற்றை தெளிவாகப் புலப்படுத்துவதற்கு உதவும் குறிகாட்டிகளைப் பட்டியற்படுத்துக.

(04 புள்ளிகள்)

ஆ. **"தகவல் தொகுதி முறைமை"** பற்றிய இரு பிரதான விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பாக கருத்துரைக்குக.

(06 புள்ளிகள்)

இ. "உண்மையான தகவல்களை மையமாகக் கொண்டே அபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்கலாம்" இந்த வகையில் பாடசாலைகளில் தகவல் தொகுதிகளை முறையாகப் பின்பற்றுவதனால் உண்டாகும் விளைதிறன் அபிவிருத்திகள் தொடர்பாக மதிப்பிடுக.

(14 புள்ளிகள்)

05. அ. கலைத்திட்டத்தின் மூன்று (03) பகுதிகள் தொடர்பாகக் குறிப்பிட்டு அவற்றில் பாடசாலையின் உடனடி மாற்றத்தினை ஏற்படுத்த எப்பகுதியில் அதிகூடிய கவனம் செலுத்தவேண்டும் என்பதனையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

ஆ. கலைத்திட்ட அமுலாக்கத்தில் நேரசூசி தயாரிக்கும்போது பாடசாலை நிர்வாகம் எதிர்நோக்கும் சவால்களும், பதில் வேலைகளும் தொடர்பாக கருத்துரை வழங்குக.

(06 புள்ளிகள்)

இ. சில பாடசாலைகள் பாடவிதானங்களுக்கும் சில பாடசாலைகள் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கலைத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் மறுதாக்கமே, இன்றைய நிலையில் "மாணவர்கள் பிரத்தியேகக் கல்வியை நாடுகின்றனர்" இது குறித்த உமது நிலைப்பாட்டினை **கவனயீர்ப்பும் - கலைத்திட்டமும்** எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

(14 புள்ளிகள்)

06. அ. ஆசிரியர்களையும், கல்வி நிறுவனங்களையும் தொடர்பு படுத்தி மேற்கொள்ளப்படும் ஆசிரியர் அபிவிருத்தி நடவடிக்கைகள் (Teacher-Development) தொடர்பான பரிமாணங்களைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

ஆ. **"ஆசிரியர்கள் கற்பிப்பவர்கள் மட்டுமல்ல வழிகாட்டுபவர்களாகவும் காணப்படுகின்றனர்"** இதன் மூலம் அவர்களுக்கு முன்னூட்டல்கள் வழங்கப்பட வேண்டிய அவசியத்தினை ஆசிரிய அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(06 புள்ளிகள்)

இ. ஆசிரியர் வாண்மை இலக்குகள் தொடர்பாக **Hayward Bradly** முன்மொழிந்த இலக்குகள் ஒவ்வொன்றும் "ஆரம்ப கால ஆசிரியர்களை விடவும் இன்று புதிதாக நியமனங்கள் வழங்கப்படும் ஆசிரியர்களிடம் காணப்படுகின்றது". என்பதனை விமர்சனரீதியாக ஆராய்க.

(14 புள்ளிகள்)

07. கீழ்வருவன தொடர்பான விடைகளை சுருக்கமாக விளக்குக.

அ. திட்டமிட்ட மாற்றச் செயற்பாடு பற்றிய கருத்து.

ஆ. மனிதவள அபிவிருத்தியில் தனியாள் விருத்தியாக்க வேண்டிய பரப்புக்கள்.

இ. பாடசாலை விளைதிறனுள்ளதா? இல்லையா? என்பதை இனங்காண்பதற்கான நுட்பங்கள்.

ஈ. கூட்ட மண்டப ஒழுங்கமைப்பில் **"U"** வடிவ உரையாடல் முறையின் சாதகங்கள்.

உ. விளைதிறன்மிக்க தொடர்பாடலில் - உளவியல் தொலைவு.

ஊ. பாடசாலை மட்டமுகாமைத்துவம் **(SBM)** தோன்றக்காரணிகள்.

(06 x 04 = 24 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் : (பகுதி I) 28 + (பகுதி II) 72 = 100